NLDB

ජාතික පශු සම්පත් සංවර්ධන මණ්ඩලය
தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை
National Livestock Development Board

අපි නිරතුරුවම ප්‍රගතිය කරා පියනගමු

நாளுக்கு நாள் முன்னேற்றத்தை நோக்கி பயணிக்கின்றோம்

WE CONTINUE TO GROW EACH DAY

වාර්ෂික වාර්තාව
வருடாந்த அறிக்கை
Annual Report
2013

WE CONTINUE TO GROW EACH DAY

It is with great esteem that we approach our 42nd year as the leading producer and manufacturer of livestock in Sri Lanka. NLDB manages 30 livestock and crop integrated farms having built a reputation for revamping and preserving the livestock industry with coconut plantations.

A training centre was established to impart knowledge and educate farmers on the theoretical and practical aspects of farming. At NLDB we take growth seriously and continue to incorporate the finest business ethics and maintain stringent standards as an industry leader.

Therefore it with great ambition, unshakable focus and unparalleled positivity, that we continue to grow each day.

NLDB

National Livestock Development Board

වාර්ෂික වාර්තාව
வருடாந்த அறிக்கை
Annual Report 2013

අපි නිරතුරුවම ප්‍රගතිය කරා පියනගමු

நாளுக்கு நாள் முன்னேறத்தை நோக்கி பயணிக்கின்றோம்

WE CONTINUE TO GROW EACH DAY

முன்னேறத்தை
யளிக்கின்றோம்

உள்ளடத்கம்

தொலைநோக்கு,குறிக்கோள்	76-77
அமைச்சரின் செய்தி	78-79
பிரதி அமைச்சரின் செய்தி	80-81
தலைவரின் அறிக்கை	82-83
பிரதித் தலைவரின் அறிக்கை	84-85
பணிப்பாளர் சபை	86-87
முகாமைத்துவ அணியினர்	88-89
பண்ணைகள் அமைந்துள்ள இடங்கள்	92
செயற்பாட்டு மீளாய்வு	93-104
நிதி அறிக்கை	108-154

தொலைநோக்கு

எமது மக்களின் சமூக, பொருளாதார நிலைமைகளை மேம்படச் செய்யவென தரமான இனப்பெருக்க சாதனங்கள், கால்நடை மற்றும் விவசாயப் பொருட்களை உற்பத்தி செய்யும் இலங்கையில் சிறந்த சுய பூர்த்தியுள்ள அமைப்பாகச் செயற்படுவதாகும்.

குறிக்கோள்

பலதரப்பட்ட விவசாய மற்றும் சுற்றுப்புறச் சூழல் வலயங்களில், மன நிறைவுடனான தொழிலாளர்களை ஈடுபடுத்தி, கால்நடை மற்றும் பயிர்ச் செய்கை ஒன்றிணைந்த பண்ணைகளை நடத்துதல்.

கால்நடை மற்றும் பாற்பண்ணைப் பொருட்கள் சம்பந்தமாக சுய பூர்த்தியுள்ளநாடாக இலங்கையை ஆக்கவென, இனவிரத்தி விலங்குகளை தொடர்ச்சியாகவிவசாயிகளுக்கு வழங்கும் நோக்கில் நியாயமான காலப்பகுதிக்குள் கால்நடை அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

சபையின் உற்பத்தியையும், இலாபமீட்டும் தன்மையையும் அதிகரிக்கவென புதியதொழில்நுட்பத்தை உபயோகித்து, கால்நடை மற்றும் விவசாய உற்பத்திகளை அதிகரித்தல்.

நாட்டின் பணப் பயிர் உற்பத்திக்கு உதவும் வகையில், தெரிவு செய்யப்பட்டபண்ணைகளில் பணப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளல்.

கால்நடை மற்றும் பயிர்ச் செய்கைகளில் இருந்து உச்சகட்ட உற்பத்தியை பெறுதல். கால்நடை மற்றும் பயிர்ச்செயிகை இணைந்தபண்ணைவழிமறைகள் முலம் உச்சகட்ட உற்பத்தியை பெறுதலும், புவியியல் நன்மையை அடிப்படையாகக் கொண்ட பயிர்ச் செய்கை வழிமுறைகளைக் கடைப்பிடித்தலும்.

பொது இலக்கு

தெங்கு பொருட்களை அடிப்படையாகக்கொண்டகைத்தொழில்கள் மூலம் கிடைக்கும் மேலதிக நிதியை உபயோகித்து சகல பண்ணை நடவடிக்கைகளையும் உச்சக்கட்டத்தில் பேணுதல்.

சந்தை நடவடிக்கைகளில் வெற்றிகரமாககப் போட்டியிடவென புதிய தொழில்நுட்பம் நிபுணத்துவம், மூலதனம் சிறந்த முகாமைத்துவ நடவடிக்கைகள் என்பன அறிமுகம் செய்யப்பட்டும் அதேசமயத்தில் செலவீனத்தைக் குறைத்தலும், உற்பத்தியை அதிகரித்தலும்.

தனியார் தொழில்துறையின் பங்களிப்புடன் இந்தவிவசாயப் பண்ணைப் பிரிவுகளை, இலாபம் தரும் வர்த்தக அமைப்புகளாக மாற்றவென சிறந்த சந்தைப்படுத்தல் வழிமுறைகளுடன் கூடிய புதிய சந்தைகளுக்குள் பிரவேசிப்பதற்கான சாத்தியங்களை ஆராய்தல்.

முக்கியநடவடிக்கைகள்

கால் நடைகளைவளர்த்து இனவிருதிசெய்தல்.

நியாயவிலையில் விவசாயிகளுக்குதரமான இனவிருத்திப் பொருட்களைவழங்குதல்.

உச்சக்கட்ட இலாபத்தைப் பெறவெனதென்நதோட்ங்களை சிறந்த முறையில் பராமரித்தல்.

பொருத்தமான பண்ணைகளில் கால்நடைபயிர்செய்கை ஒன்றிணைந்த பண்ணை வழிமுறைகளை மேற்கொள்ளுதல்.

முக்கியமாக சிறிய அளவிலான கால்நடை பண்ணையாளர்களுக்கும், பொதுவாக விவசாயிகள், மாணவர்கள், விவசாயத்துறையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் ஆகியோருக்கு பயிற்சியும் செய்முறைவிளக்கமும் வழங்குதல்.

உச்சகட்ட இலாபத்தை பெறவெனபண்ணைப் பொருடகளை உபயோகித்து பெறுமதிமிக்ககொருட்களை உற்பத்தி செய்தல்.

மக்கள் மத்தியில் பால் பருகும் பளக்கத்தை பிரபல்யபடுத்தும் வகையில் சுத்தமானபசும்பாலை விற்பனைசெய்தல்.

அமைச்சரின் செய்தி



பால் உற்பத்தியில் தன்னிறைவை ஏற்படுத்துதல் மற்றும் கால்நடை வளப்போர்களின் ஜீவனோபாயங்களை பெருக்குதல் ஆகியவை இச் சபையின் அடிப்படை இலட்சிய நோக்காகும்.

தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபை பால் உற்பத்திற்கும் வாழ்வாதார பெருக்கத்திற்கும் பெரும்பணி

தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபையின் வளர்ச்சியையும், மலர்ச்சியையும் கண்டு நாம் பெருமையடைகின்றோம். கால்நடை வளர்பை அபிவிருத்தி செய்வதே தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபையின் பிரதான நோக்காகும்.

இது வரை இதன் மூலமாக கால்நடை அபிவிருத்திக்கும் கால்நடை வளர்ப்போரின் வாழ்வாதாரத்திற்கும் “மகிந்த சிந்தனை” வேலைத் திட்டதிற்கமைய, உரிய திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தி வருகின்றது. கால்நடை வளர்ப்பை அபிவிருத்தி செய்தல், பால் உற்பத்தியில் தன்னிறைவை ஏறடுத்துதல், கால்நடை வளர்ப்போர்களின் ஜீவனோபாயங்களை பெருக்குதல் ஆகிவை இச்சபையின் அடிப்படை இலட்சிய நோக்காகும்.

இந்த சபை இது வரை குறிப்பிடத்தக்க வெற்றிகளை கண்டுள்ளதோடு, தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபை உயர்தரத்திலான சினைப்படுத்தல் மூலப்பொருட்களை கால்நடை வளர்ப்போருக்கு குறைந்த விலையில் பெற்றுக் கொடுப்பதை வெற்றிகரமாக முன்னெடுத்து வருகின்றது.

இதன் மூலமாக அவர்கள் வலையமைப்பு ஒன்றையும் அமைத்து கொண்டுள்ளார்கள். இந்த அமைப்பு இவர்களின் அவசர அவசிய தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றிக் கொள்வதற்க்கு பெரிதும் உதவுகின்றது என்பதையும் இத்தருனத்னில் சுட்டிக் காட்டுகின்றோம்.

தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபையை இலாபம் பெறும் ஒரு அரச நிறுவனமாக மாற்றுவதற்க்கு தனது கடின உழைப்பையும், சக்தியையும் பெற்றுக் கொடுத்த பணிப்பாளர் சபைக்கும் பிரதான மற்றும் வலய அலுவலங்களின் ஊளியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆறுமுகன் தொண்டமான். பா.உ.
அமைச்சர் - கால்நடை வள மற்றும் கிராமீய சமூக அபிவிருத்தி அமைச்சு

பிரதி அமைச்சரின் செய்தி

நவீன தொழில்நுட்ப முறைகளுக்கமைய செயற்ப்பட்டு நிறுவனத்தின் கீழுள்ள பண்ணைகளில் கால்நடைகளுக்கு மேலதிகமாக தெங்கு உற்பத்தி மற்றும் குறுங்கால பயிர்களை பயிர்ச்செய்வதன் மூலம் வெற்றியளிக்ககூடிய மேலதிகமான பொருளாதார இலாபங்களை நிறுவனம் அடைந்துள்ளது.

கால்நடை வள துறையில் நம் நாட்டை தன் நிறைவு பெறுவதை நோக்காக கொண்டு 1973 ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட தேசீய கால்நடை வள அபிவிருத்தி சபை அதன் குறிக்கோள்களை அடைவதற்க்கு மிகவும் அர்ப்பணிப்புடண் செயற்படும் நிறுவனம் என்பதை பாராட்டுகளுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

தற்போதைய அரசின் தொலை நோக்குக்கமைய பாலால் நாட்டை தன் நிறைவு செய்வதற்க்கான மாபெரும் குறிக்கோள்களை அடைந்து கொண்டு தேசீய பால் விவசாயிகளை கால்நடை துறைக்கு ஊக்குவிப்பதோடு இதன் மூலம் அவர்களின் பொருளாதாரத்தை மேலும் வலுவான நிலைக்கு கொண்டு வருவதற்காக பல வகையான வேலை திட்டங்களை ஏற்கனவே நடைமுறைப்படுத்தியுள்ளதுடண் இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் பால் விவசாயின் எதிர்காலம் பாதுகாக்கபடும் என்பது எனது நம்பிக்கையாகும்.

நவீன தொழில்நுட்ப முறைகளுக்கமைய செயற்ப்பட்டு நிறுவனத்தின் கீழுள்ள பண்ணைகளில் கால்நடைகளுக்கு மேலதிகமாக தெங்கு உற்பத்தி மற்றும் குறுங்கால பயிர்களை பயிர்ச்செய்வதன் மூலம் வெற்றியளிக்ககூடிய மேலதிகமான பொருளாதார இலாபங்களை நிறுவனம் அடைந்துள்ளதுடன் இவ்வாறான செயற்பாடுகளை மேலும் ஒழுங்கமைப்புடண் முன்னெடுப்பது மூலம் கூடுதலான பயனளிக்ககூடிய பெறுபேறுகளை நாட்டுக்கு பெற்றுக்கொடுக்க முடியும். மேலும், நிறுவனத்தின் ஊழியர்களின் நலன்களை உயர் நிலைக்கு கொண்டு வருவதன் மூலம் திருப்த்தியடைந்த ஊழியர் படையினரை உருவாக்கி கொள்ள முடியும்.

நிறுவனத்தின் எதிர்க்கால முன்னேற்றத்திற்காக ஏற்கனவே ஆரம்பித்துள்ள எல்லா வேலைத்திட்டங்களிலும் வெற்றிகளை அடைந்து கொண்டு தேசீய கால்நடை வளங்கள் துறையின் அபிவிருத்திற்காக உறுதியான பங்களிப்பை வழங்குகின்ற மக்களின் அன்புக்கும் மதிப்புக்குள்ளாகும் ஓர் மாபெரும் நிறுவனமாக அமையும் என்பது எனது நம்பிக்கையாகும்.

இந்த குறிக்கோள்களை அடைவதற்க்கு தற்போதய தலைவர், பணிப்பாளர் சபை உட்பட அனைத்து ஊழியர்களுக்கும் சக்தியும் பலமும் கிடைக்க வெண்டுமென வாழ்த்துகிறேன்.

ஏச்.ஆர். மித்திரபால - பாராளமன்ற உறுப்பினர்
காலநடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி பிரதி அமைச்சர்

தலைவரின் அறிக்கை

கிராமிய மற்றும் நடுத்தர வருமானமுள்ள சமுதாயத்திற்கு கால்நடை வளர்ப்பதில் நவின பழக்கங்கள் மற்றும் தொழில் நுணுக்கங்கள் சம்பந்தமான தாக்கங்களின் அறிவை மேம்படுத்தி கொள்வதற்கு கால்நடை விவசாய துறையில் பயிற்ச்சி வசதிகளையும் வழங்கியுள்ளோம்.

இலங்கையில் கால்நடை தொழில் துறைக்கு நாட்பது வருட மதிப்பு மிக்க செவையை வழங்கி இந்த 2013 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையை சமர்பிப்பதில் பெருமையும் அபிமானமும் அடைகிறோம். எங்கள் தொலைநோக்கில் குறிப்பிட்டுள்ள இலக்குகளை அடைவதற்க்கு கிராமிய பண்ணை விவசாயிகளுடைய வாழ்கை தரத்தை உயர்தி இத்தொழில் துறைக்கு பாரிய பங்களிப்பை வழங்கி கடந்த பல வருடங்களாக கடின உழைப்பின் விளைவாக நிறுவனம் இன்று அடைந்துள்ள முன்னேற்றத்தை பார்க்கும் போது மன நிம்மதியும் திருப்த்தியளிக்கின்றது.

கால்நடை மற்றும் கோழி வளர்ப்போருக்கு உயர் தர இன விருத்தி பொருட்களை பெயரளவிலுள்ள விலைக்கு வழங்குவதன் மூலம் இவ் இலக்குகளை வெற்றிகரமாக அடையப்பற்றது. கிராமிய மற்றும் நடுத்தர வருமானமுள்ள சமதாயத்திற்கு கால்நடை வளர்ப்பதில் நவின பழக்கங்கள் மற்றும் தொழில் நுணுக்கங்கள் சம்பந்தமான தாக்கங்களின் அறிவை மேம்படுத்தி கொள்வதற்கு கால்நடை விவசாய துறையில் பயிற்ச்சி வசதிகளையும் வழங்கியுள்ளோம். பல துரித அபிவிருத்தி வேலைத் திட்டங்களை நாங்கள் அரம்பித்துள்ளதுடன் எங்களுடைய பண்ணைகளை நவீனமய படுத்தியுள்ளதோடு பல நட்டத்தில் இயங்கும் பண்ணைகளை இலாபகரமானதாக்கியுள்ளோம். இறக்குமதி செய்யப்பட்ட உயர்தர கால்நடை மற்றும் கோழி தொகை மூலம் இலங்கை தீவில் இன விருத்தி பொருட்களை விணியோகிக்கும் கேந்திர நிலையமாக உகந்த இடங்களில் அமைக்கப்பட்டுள்ள பண்ணைகளிலுள்ள கால்நடை மற்றும் கோழிகளின் மரபு சாத்தியங்களின் தன்மையை மேம்படுத்த உதவியுள்ளது. ஒஸ்ரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கால்நடைகளை சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்ததை கௌவரவிக்கும் வகையில் தேசிய வேலைத்திட்ட முகாமைத்துவ சிறப்பு விருது 2013ஆண்டில் எங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தேவைப்படும் திருத்தல் வேலைகள் மற்றும் நிர்மான பனிகள் மூலம் சபையின் கட்டமைப்புகளை அபிவிருத்தி செய்துள்ளோம். பண்ணைகளிலுள்ள கால்நடைகளுக்கான கொட்டில்கள், சுற்றுலா விடுதிகளின் அபிவிருத்தி வேலைகள், விற்பனை நிலையங்கள் மற்றும் ஊழியர் வாசஸ்தளங்கள் என்ப வற்றின் நிர்மான மற்றும் திருத்தல் வேலைகள் போன்றவைகளால் அபிவிருத்தி செய்யப்பட்டது.

எமது முயற்ச்சிகளுக்கும் வெற்றிகளுக்கும் பங்களிப்பு செய்த முகாமைத்துவ அங்கத்தவர்கள் மற்றும் ஊழியர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெறிவித்துக்கொள்கிர அதே வேலை இவர்களின் ஒத்துழைப்பும் கடின பங்களிப்பும் இல்லாமல் இருந்திந்தால் இந்த வெற்றிகளை அடைய முடியாமல் போயிருக்கும். எல்லா ஊழியர் மட்டத்திலும் நிலவிய குழு பொருப்பு உனர்ச்சி எமது முயற்ச்சிகளை பலன் தர கூடியதாக ஆக்கியது.

எங்கள் கௌரவ அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் அவர்கள், கௌரவ பிரதி அமைச்சர் எச்.ஆர். மித்திரபால அவர்கள், அமைச்சின் செயலாளர் உட்பட எல்லா உத்தியோகத்தர்களினதும் வழிகாட்டலும் காட்டிய அதரவுக்கும் மிகவும் மதிப்பளிக்கிறேன். பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களின் மிகுந்த ஆர்வமும் ஒத்துழைப்பும் எங்களின் முயற்ச்சி வெற்றியளிக்க ஓர் காரனமாக அமைந்தது.

ஊழியர்களின் பொறுப்புக்கும் அர்பணிப்புக்கும் எனது மனபூர்வமான நனறியை மீண்டும் ஒரு முறை தெறிவித்துக்கொள்ள விரும்பும் அதே வேலை மேலும் எதிர் காலத்தில் முன்னேற்றங்களை அடைவதற்க்கு இந்த அர்பணிப்பும் ஆர்வமும் தொடர்ந்து நீடிக்கும் என நான் நம்புகிறேன்.

ரஞ்ஜித் எல்லேகல
தலைவர்

பிரதித் தலைவரின் அறிக்கை

நாங்கள் சுய நிதியில் இயங்கும் நிறுவனமாக இருநதாலும் கூட, மக்கள் சேவையே எங்களின் முக்கிய நோக்கமாக கருதுகிறோம். இலாபம் ஈட்டுவது எமது பிரதான நோக்கமாக கருதுவது கிடையாது.

இந்த 2013 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையை நாங்கள் மிகவும் ஆர்வத்துடன் சமர்பிப்பிக்கின்றோம். ஏனெனில் புதிய பணிப்பாளர் சபையின் பணி ஏற்றுக்கொள்ள பட்ட நாள் முதல் "மஹிந்த சிந்தனை" தொலைநோக்கு வேலை திட்டத்தினூடாக பால் உற்பத்தியில் தன் நிறைவு பெறுவதில் நிறுவனம் என்ற ரீதியில் பல முன்னேற்றங்களையும் அபிவிருத்தி இலக்குகளையும் அடைந்துள்ளோம்.

நாங்கள் தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையை இலாபம் ஈட்டும் நிறுவனமாக மாற்றியுள்ளோம். அதே போனறு கிராமிய பொருளாதாரத்திக்கு நேரடி விளைவு ஏற்படுத்தும் கால்நடை மற்றும் பால் உற்பத்தி துறையில் கேந்திர நடவடிக்கைகளில் நாட்டுக்கு பல பங்பளிப்புகளை வழங்கியுள்ளோம். நாங்கள் சுய நிதியில் இயங்கும் நிறுவனமாக இருநதாலும் கூட, மக்கள் சேவையே எங்களின் முக்கிய நோக்கமாக கருதுகிறோம். இலாபம் ஈட்டுவது எமது பிரதான நோக்கமாக கருதுவது கிடையாது.

மக்களிடையே திரவ பால் அருந்துவதை ஊக்கமளிக்கும் முயற்ச்சிகள் நல்ல பெறுபேறுகளை அளித்துள்ளது. கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலுள்ள விற்பனை நிலையங்களின் தரத்தை உயர்த்தியுள்ளதுடன் இதன் மூலம் நுகர்வோர்களிடையில் திரவ பால் அருந்துவதை பிரசாரம் செய்து ஊக்குவிப்பதற்க்கு சந்தர்பம் கிடைக்கும் அதே சமயம் எமது பண்ணைகளின் தரமான உற்பத்தி பொருட்களும் அறிமுகப் படுத்த முடியும்.

எங்களின் ஊழியர்களின் முக்கியத்தையும் பெறுமதியையும் நங்கு அறிந்த நாம் சமுதாய பொருப்புகளையும் உற்பத்தித்திறன்களையும் உனர்த்துவதற்காக சமூக நலன்புரி வேலை திட்டங்களுடாக பல ஊக்குவிப்பு திட்டங்களும் வசதிகளும் ஏற்படுத்தி கொடுத்துள்ளோம். எங்களின் முயற்ச்சிகளை வெற்றியடைய செய்வதற்கு அவர்கள் வழங்கிய ஒத்துழைப்பும் உற்சாகமும் பாராட்டகுறியதுடன் இவைக்காக எனது மனமார்ந்த நன்றியையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

கால் நடை வள மற்றும் கிராமிய சமுதாய அபிவிருத்தி அமைச்சர் கௌரவ ஆறுமுகம் தொன்டமான அவர்களால் வழங்கிய சக்திமிக்க தலமைத்துவமும் வழிகாட்டலும் திறமைமிக்க முறையில் இவைகளுக்காக ஆதரவுயளித்த பிரதி அமைச்சர் எச்.ஆர்.மித்திரபால அவர்களாலும் அமைச்சின் செயளாலர் உட்பட உத்தியோகத்தர் களாலும் நாங்கள் அடைந்த சாதனைகள் சாத்தியமானது.

லெப்டினற் கர்னல் ரன்ஜித் எல்லேகலயின் திறமைமிக்க தலமைத்துவத்தின் கீழ இன்னும் பல சாதனைகளை அடைய முடியும் என்பது எனது அசையாத நம்பிக்கையாகும். இதற்காக எனது முழு ஒத்துழைப்பும் ஆதரவும் என்றும் இருக்கும் என்பதை உறுதியளிக்கின்றேன்.

ஏ.ஆர். அனுர ஜயசிரி
பிரதி தலைவர்

பணிப்பாளர் சபை

இடது பக்கமிருந்து

திரு ஆர். எம். பி. எல்லேகல (தலைவர்)
திரு. ஏ.ஆர். அனுர ஜயசிரி (பிரதி தலைவர்)
மருத்துவர் சம்சன் எல். ஏ. டானியல்
திரு. ரவீன்திர மனோஜ் கமகே

இடது பக்கமிருந்து

திரு. ஆர். அசோக் குமார்
கலாநிதி பிரேம குமார த சில்வா
திரு. எஸ். பாலசந்திரன்
கே. எம். கே. சிரிவர்தன

முகாமைத்துவ அணியினர்

இடது பக்கமிருந்து

ஏ.சி.எச். முணவீர
பொது. முகாமையாளர்

டி. உபாலி ஜயவர்தன
பி.பொது முகாமையாளர் (கால் நடை மற்றும் பயிர்ச்செய்கை அபிவிருத்தி)

டி. மெத கெதர
பி.பொது முகாமையாளர் (நிறுவன செயற்பாடுகள்)

கே.கே.ஆர் கன்னங்கர
உதவிப் பொது முகாமையாளர் (மனிதவளங்கள் மற்றும் நிர்வாகம்)

இடது பக்கமிருந்து

என்.பீ.சி. ஏக்கநாயக்க
உதவிப் பொதுமுகாமையாளர் (நிதி)

எம்.டி. கருணாதிலக
முகாமையாளர் (கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு)

எம். ராஜகருணா
முகாமையாளர் (நிதி)

திருமதி. எஸ்.ஏ.எஸ். தெவரப்பெரும
நிர்வாக முகாமையாளர்

NLDB
නැවුම්ම නැවුම් එළකිරි
தூய்மையான பசும் பால்
Pure and fresh
Nutritious Gouda cheese

நடவடிக்கைகளின் மீளாய்வு

பண்ணைகள் அமைந்துள்ள இடங்கள்





1. Andigama
2. Beligama
3. Bopaththalawa
4. Dayagama
5. Galpokuna
6. Haragama
7. Horrakeley
8. Kandekaduwa
9. Karandagolla
10. Kottukachchiya
11. Koulwewa
12. Mahaberiyantenna
13. Marandawila
14. Marawila
15. Martin
16. Melsiripura
17. Miriswatte
18. MLDC
19. Narangalla
20. Nikaweratiya
21. Oyamaduwa
22. Paragaswewa
23. Polonnaruwa
24. Polonthalawa
25. Ridiyagama
26. Rosita
27. Rukkaththana
28. Siringapatha
29. Weerawila
30. Welikanda
31. Welisara

பால் பண்ணை அபிவிருத்தி:

1. இலங்கை பால் பண்ணை அபிவிருத்தி வேலைத் திட்டம்

வருடாந்தம் ரூபா 30 பிலியன் போன்ற பெரும் பனத் தொகையை செலவு செய்து, மெ. டொன் 70,000 - 75,000 வரையிலான பால் மா தொகையை இலங்கை அரசாங்கம் இறக்குமதி செய்கிறது. பாலில் தன்நிறைவு பெற வேண்டுமானால், மேலும் 482 மில்லியன லீட்டர் பால் வருடாந்தம் உற்பத்தி செய்ய வேண்டிய தேவை ஏற்படுகிறது. தற்போதைய தேசீய கால் நடை வளத்தினுடாக இந்த உற்பத்தி இலக்கை அடைவது முடியா காரியமாகும். ஆகவே,பால்பண்ணை கால்நடைகளின் உயிரியல் பெறுமானத்தை மேம்படுத்தவேண்டியது உடனடி தேவையாக உள்ளது. ஆனால், இது காலம் போகும் நடவடிக்கை மற்றுமல்லாது பல தசாப்தங்கள் எடுக்கும் செய்முறையாகும்.ஆயினும்,நமது உள்ளூர் விவசாயிகள் ஒன்று அல்லது இரண்டு பசு மாடுகளை சொந்தமாக வளர்த்து பராமரிக்கிற படியால், இக் கால் நடைகளின் உற்பத்தி திறனை மேம்படுத்துவதின் மூலம் தேசீய மட்டத்திலான உற்பத்தி திறனை அதிகரிக்க செய்யலாம். இந்த இலக்கை அடைவதற்க்கு, அதிக என்னிக்கையிலான தரமான இனவிருத்தி கால்நடைகளை விவசாயிகளுக்கு வழங்குவதன் மூலமே பால் பண்ணைதுறையில் அபிவிருத்தி கான முடியும்.

தற்போது தேசிய உற்பத்திக்கு தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்தி சபையின் பங்களிப்பு 3மூ அளவில் உள்ளதுடன் இது பால் பண்ணைதுறையில் தாக்கத்தை ஏற்படுத்த முடியாதுள்ளது. அகையால், தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்தி சபையின் பால் உற்பத்தியை அதிகரித்து உள்ளூர் தேவையிக்கினங்க தேசிய உற்பத்திக்கு தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்தி சபையின பங்களிப்பை 7மூ மாக்க திட்டமிட்டுள்ளது. அதே சமயத்தில், அடுத்த ஐந்து அண்டுகளினுள் பால் பண்ணையாளருக்கு கூடுதலான என்னிக்கையில் பசுக் கன்றுகளை வழங்குவதற்காக அதிக என்னிக்கையில் பசுக்களை உற்பத்தி செய்யப் படவுள்ளது. மேம்படுத்தப்பட்ட தரமான இன விருத்தி பொருட்களை பண்ணையாளருக்கு வினியோகப்பதற்காக எங்களுடைய பண்ணைகளை வழங்களின் கேந்திர நிலையமாக பயன்படுத்தப்படும்.

மேற் குறிப்பிட்ட குறிக்கோளை அடைவதற்காக, மிகச் சிறந்த அதிக விளைச்சளை தரும் பிரிஸியன், ஜேர்ஸி மற்றும் ஜேர்ஸ ி - பிரிஸியன் இனங்களை சேர்ந்த கருத்தரித்த இனகலப்பு செய்யப்பட்ட 2000 இளம் பசுக்களை இரண்டு தசாபத்திற்கு பிறகு "மஹிந்த சிந்தனை" கொள்கைகளுக்கமைய தேசிய கால்நடை வள அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் பிரகாரம் இலங்கைக்கு இறக்குமதி செய்வதில் தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்தி சபை வெற்றிக் கன்டுள்ளது. இக் கால்நடைகளை இனகலப்பு செய்யப்பட்ட 2000 இளம் பசுக்களை செய்யபடடுள்ளது. இவைகளை மலைநாட்டிலுள்ள மனிக் பாலம, போபத்தலாவ மற்றும் டயகம போன்ற பண்ணைகளில் வைக்கப்படடுள்ளது.

தறபோது, இந்த இறக்குமதி செய்யப்பட்ட தொகையின் கண்று போடும் காலம் ஏற்கனவே ஆரம்பிக்கப்படடுள்ளது. மேற்குறிப்பிட்ட பண்ணைகளிலுள்ள கறவை பசுவின் சராசரி விளைசச்சல், இறக்குமதி செய்வதற்க்கு முன் 07 லீட்டராக மட்டுமாக இருந்த விளைச்சல் தற்போது ஒரு நாளுக்கு 20 லீட்டர் வரை அதிகரித்துள்ளது. சபையின் மொத்த பால் உற்பத்தி தற்போது ஒரு நாளுக்கு 30,000 லீட்டர் வரை அதிகரித்துள்ளது. மற்றுமொரு மிகச் சிறந்த அதிக விளைச்சளை தரும் இனகலப்பு செய்யப்பட்ட 2500 இளம் பசுக்களை 2014 இல் இற்குமதி செய்யபடவுள்ளதுடன, இவைகளை தெற்கிலுள்ள ரிதியகம பண்ணையில் தங்கவைக்கப்படும்.

போபத்தலாவ மற்றும் டயகம பால் பண்ணைகளில் கொட்டில்களின் அபிவிருத்த

போபத்தலாவ மற்றும் டயகம பால் பண்ணைகளிலுள்ள சகல கால்நடைக் கொட்டில்களும் இறக்குமதி செய்யப்பட்ட கால் நடைகளின் தேவைகளைக் கருத்திற் கொண்டு புதிய உகரனங்கள் மற்றும் கருவிகளுடன் அபிவிருத்தி செய்யப்பட்டன. இந்தப் பண்ணைகளின் முகாமைத்துவத்தையும், உற்பத்தியையும் அதிகரிக்கவென, அதி நவீன பாற்பண்ணை இயந்திரங்களும் அறிமுகம செய்யப்பட்டன.

புதிய பால் கறவை இயந்திரங்களின் அறிமுகம்

இயந்திரங்கள் மூலம் பால் கறக்கும நடவடிக்கை ஒரு நாளைக்கு இரண்டு தடவைகள் இடம் பெறுகின்றன. 10 நிமிடத்தில் 48 பசுகளிலிருந்து இந்த இயந்திரம் பாலைக் கறக்கும் சக்தி கொண்டது. பால் கறவை இயந்திரங்களும், குளிர் பதன தாங்கிகளும் தன்னியக்க அடிப்படையில் சுத்தரிக்கப்படுகின்றன. ஊளியர்களின் கை படாததனால் பாலின் தரம் உச்சக்கட்டத்தில் உள்ளது.

இலங்கைக்கு இறக்குதி செய்யப்பட்ட அனைத்துப் பசுக்களும் மிகவும் உயர்ந்த ரக கால்நடைகள் மற்றுமின்றி அதிக விளைச்சலை தரக்கூடியவையாகும். பீரீஸியன் இனத்தை சேர்ந்த ஒரு பசுவின் ஒவ்வொரு பால் கறக்கும் காலத்திலும் 6000 லீட்டர் பால் பெறக்கூடியதாக இருக்கிற அதே வேலை கலப்பு மற்றும் ஜர்சி இனத்தை சேர்ந்த பசுக்களிடமிருந்து முறையே இது 5500 மற்றும் 6000 லீட்டர் பால் பெறக்கூடியதாக இருக்கிறது. இந்த பசுக்கள் அனைத்துக்கும் இலத்தரனி தகடு பொருத்தபட்டுள்ளதுடன், இவைகள் பால் கறக்கும் மண்டபத்திற்க்கு உட்பிரவேசிக்கும் இந்த இலத்தரனி தகடுகளின் தகவல் மூலமாக தன்னிசையாக அளவுகள் பதியப்படுகிறது.

பால் கறக்கும் இடத்தில் பசுக்களை இனம் கானப் படுவதுடன் இவைகளின் பால் விளைச்சல், பால் வடியும் வேகம், பாலின் மாற்றங்கள் ஏதும் ஏற்பட்டிருந்தால் அதன் விபரங்கள் என்பன ஒவ்வொரு பசு சம்பந்தமாகவும் தகவல்கள் இனைக்கப் பட்டுள்ள கணணியின் மூலம் பதிவாகிறது. புால் கறந்த பிறகு நுழைவாயிலுள்ள கணணியூடாக எந்த ஒரு பசுவையும் தேர்ந்தெடுத்து தனிமை படுத்த முடியும். கணணியிலுள்ள இலக்கங்களினுாடாக சினைபடுத்த பொருத்தமான பசுக்களை மற்றும் பரிசோதனை செய்ய வேண்டிய பசுக்களையும் வைத்தியம் பார்க்க வேண்டிய கால் நடைகளும் தன்னிசையாக தேர்ந்தெடுக்கப்படுகின்றது. நாளாந்தம் கவனிக்க வேண்டிய பசுக்களின் பட்டியல் ஒனறும் பெற்றுக்கொடுப்பதுடன் இதில் உள்ளடக்கப்பட்ட தகவல் மத்தியில் சினையூட்டல் தேவைப்படும் கால் நடைகள், கருவுற்ற நிலமையை பரிசோதனை செய்ய வேண்டிய பசுக்கள் மற்றும் திரும்பவும் செயற்கை சினையூட்டலுக்காக பரிசீலிக்க தேவைப்படும் பசுக்கள் சம்பந்தமான விபரங்கள் அடங்கும். ஒவ்வொரு பசுக்கள் சம்பந்தமான பால் கறவை பற்றிய விபரங்கள் ஒவ்வொரு பால் கறக்கும் வேலையிலும் வழங்கப்படும்.

கண்று ஈன்றெடுத்தல், செயற்கை சினையூட்டுதல், சிகிச்சைகள் போன்ற எல்லா நடவடிக்கைகளும் நாள் தோரும் கணணிகளுக்கு பதியப்படுகிறது. இதனடிப்படையில், பசுக்கள் சம்பந்தமான எல்லா விபரங்களும் அறிக்கைகளும் எளிதில் உடனடியாக பெற்றுக்கொள்ள முடியும். அதிக விளைச்சலை தரும் 1500 பசுக்களை 2013 ம் ஆண்டு ஜனவரியில் செய்த இறக்குமதியுடன், பால் உற்பத்தி நாளொன்றுக்கு மேலும் 20,000 - 22,000 லீட்டர் வரை அதிகரிக்கும். இன்னும் 2500 பசுக்களை 2014 ஆன்டளவில் இறக்குமதி செய்து 5000 - 6000 வரையிலான அதிக விளைச்சலை தரும் மேம்படுத்தப்பட்ட பசு இனங்களை ஒரு வருடத்திற்க்கு உருவாக்குதலுக்கு திட்டமிடப்பட்டுள்ளது.

புதிய பால் கறவை இயந்திரம் அறிமுகம்

பண்ணையின் சகல நடவடிக்கைகளிலும் நவீன வழிமுறைகள் கையாளப்படுகின்றன. ஒரு கலவை வாகனத்தை உபயொகித்து. TMR உணவளிக்கும் நடைமுறை தற்சமயம் நடைமுறையில் உள்ளது. சோலம், புல், கனிப்பொருட்கள், தவிடு போன்ற பொருட்கள் இதில் உபயோகிக்கப்படுகினறன. இந்த கலவை வாகனத்தின் மூலம் ஒரு நாளைக்கு தேவைப் படுகின்ற பொருட்கள் மற்றுமே கலவை செய்து கால்நடை உனவு தயாரிக்கப் படுகின்றன. பால் உற்பத்தியை உயர் மட்டத்தில் பேன வென, எல்லா பசுக்களுக்கும் சமமான அளவில் சம தரத்திலுள்ள உனவு வழங்கப்படுகிறது. கால்நடைகளின் சுகாதாரம் பற்றி கால்நடை வைத்தியர் ஒருவரால் கவனிக்கப்படகின்றது.

2. புல் தரை அபிவிருத்தி

கீழ் காணும் புல் வகைகளும் கால்நடை உனவுகளும் எமது பண்ணைகளில் உள்ளன.

1. Bracharia brizanthaa
2. Bracharia rusiansis
3. Kikue
4. CO3
5. NB21
6. Napier
7. Guniea A
8. Guniea b
9. Mombasa guinea
10. TD58

1-2 கட்டங்களில் 2013 ம் ஆன்டில் ஜனவரி மாதத்தில் இறக்கு மதி செய்யப்பட்ட அதிக விளைச்சலை தரும் தரம்வாய்ந்த 1500 பசுக்களுக்காக மனிக்பாலம, போபத்தலாவ மற்றும் தயகம பண்ணைகளில் 243 ஏக்கர் நில பரப்பில் கால்நடை உனவுகள் பயிரிடப்பட்டுள்ளது.

வருடம்	இலக்கு - பரப்பு (ஏக்கர்)	பயிறிடப்பட்ட பரப்பு (ஏக்கர்)	இறக்குமதி செய்யப்பட்ட விதைகள் (கி.க்ராம்)						
			M guinea	TD 58	B.Dic	Kikue	W clover	S santhus	மொத்தம்
2009	1220								0
2010		545			1550	220	65	145	1760
2011	1156	1026	1540	159	3955				5654
2012	510	872			1000				1000
2013	560	444							

3. இன விருத்தி மேம்படுத்தல்

தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்தி சபையின் விசேடமாக மலையகத்திலுள்ள பண்ணைகளில் பசுக்களின் இன விருத்தியை மேலும் வலுவூட்டுவதற்காக, கணடாவிலிருந்து பிரீசியன் மற்றும் ஜர்சி போன்ற இனத்தை சேர்ந்த 4000 சம்பிராதயபூர்வமான உயர்தர விந்துகளை (பிரீசியன் 1500, ஜர்சி 2500) 2013 ஆன்டில் சபை இறக்குமதி செய்தது. இந்த உயிரணுக்கள் உற்பத்தியிலும் இனவிருத்தியிலும் அதிக திறமை கொண்ட காளை மாடுகளிடமிருந்து பெறப்பட்டவையாகும். இந்த உயிரணுக்களை இறக்குமதி செய்யப்பட்ட விலங்களுக்கும் மற்றும் கு1 சந்ததியினருக்கு அறிமுகம் செய்வது மூலம் பிராதனமாக உள்ளூரில் தேர்ந்தேடுக்கப்பட்ட இனவிருத்தியில் ஈடுபட்டுள்ள பண்ணையாளர்களக்கு வினியோகிப்பதற்க்கு தரமான இனவிருத்தி பொருட்களை மலைநாட்டிலுள்ள பண்ணைகளில் தயார்படுத்துவதற்க்கு சபை எதிர்பார்கிறது. இந்த முயற்ச்சியின் மூலம் 2015 ஆண்டில் உள்ளூர் பண்ணையாளர் உட்பட சபையின் பால் உற்பத்தியை 35 மில்லியன் லீட்டராக ஆக்குவதற்கு சபை எதிர்பார்கின்றது.

	2013	2014	2015	2016	2017
பசு மாடுகள்					
பிரீஸியன்	406	412	398	441	490
ஜர்சி	173	177	170	192	208
யுகுளு ரூ துகு	565	644	709	796	821
பிரீஸியன் ரூ துகு	14	715	671	619	731
சுஹிவால்	77	83	85	88	92
மொத்தம்	**1236**	**2031**	**2034**	**2136**	**2341**
எருமை					
முறாஹ	145	140	143	151	169
நிலிரவி	21	20	20	20	22
மொத்தம்	**166**	**161**	**163**	**172**	**191**
பால் உற்பத்தி (லீட்டர் - மில்லியன்)					
பசும் பால்	11.2	26.0	26.9	29.0	32.0
எருமை பால்	1.0	1.3	1.3	1.3	1.3
மொத்தம் -1	12.3	27.3	28.1	30.2	33.3
ஊள்ளுர் விவசாயிகளுக்கு பசுக்களை சபையினால் வழங்குவது மூலம் எதிர்ப்பார்க்கப் படும் பால் உற்பத்தி					
பசு மாடுகள்	1.3	3.1	6.5	12.7	16.4
எருமை	0.3	0.6	0.9	1.3	1.3
மொத்தம் - 2	**1.6**	**3.7**	**7.4**	**14.0**	**17.7**
மொத்தம்	**13.9**	**31.0**	**35.6**	**44.3**	**51.0**
பால் உற்பத்தி - இலக்கு - திரண்ட திட்டம் லீட்டர்(மில்லியன்)				740	740
தேசிய கால் நடை வளங்கள் அபி. சபையின் பங்களிப்பு				6%	7%

4 நிக்கவெறட்டியவில் விற்பனை நிலையம் திறந்து விற்பனை ஊக்குவிப்பு

நிக்கவெறட்டிய - குருனாகல் நெடுஞ்சாலைக்கு எதிரே பாரிய தரிப்பிட வசதியுடன் அமைந்துள்ள நிக்கவெறட்டிய பண்ணையில் விற்பனை நிலையம் ஒன்று தேசிய .கால்நடை வளங்கள் அபிவிருத்தி சபையின் பிரதி தலைவர் திரு லக்ஸமன் ஹு லுகலலே அவர்களால் திறந்து வைக்கப்பட்டதுடன் இதனூடாக பிரதேசத்தில் உள்ள மக்களுக்கு ஒரு கூறையின் கீழ் கால்நடை மூலமான தரம் வாய்நத உற்பத்தி பொருட்களை பெற்றுக்கொடுக்க எதிர்ப்பார்க்கப்படுகிறது. இந்த விற்பனை நிலையத்தில் வசதியுள்ள நில பரப்பு உள்ளதுடன் பாவனையாளருக்கு நிம்மதியாக அமர்ந்து புதிய பசும் பாலை அருந்துவதற்க்கும் மற்றைய கால் நடை பொருட்களை ஒரே கூறையின் கீழ் அனுபவிக்க முடியும்.

இந்த விற்பனை நிலையத்தை நிக்கவெறட்டிய பண்ணையில் அறிமுகம் செய்வதன் மூலம் நாளாந்த விற்பனையில் ரூபா 100,000 வரையிலான அதிகரிப்பபை சபை எதிர்பார்கின்றது. இதன் மூலம் சபையின் இலாப தன்மையை எதிர் காலத்தில் அதிகரிக்க உதவும்.



5. டிலைட் எனும் வர்தக பெயரில் பால் பகட்டுகளின் விற்பனையை ஊக்குவிப்பு

தேசீய கால்நடை வளங்கள் அபிவிருத்தி சபை முதல்முதலாக டிலைட் எனும் வர்தக பெயரில் பால் பகட்டுகளின் விற்பனையை 2010 ம் ஆன்டில் சந்தையிக்கு அறிமுகம் செய்தது.
இந்த உற்பத்தியை சபையின் விற்பனை நிலையங்கள், அனுமதிக்கப்பட்ட விற்பனை சாலைகள், தேசீய கால்நடை வளங்கள் அபிவிருத்தி சபையின் நாறாஹேன்ப்பிட்டியில் அமைந்துள்ள பால் அங்காடி, நாறாஹேன்ப்பிட்டியில் அமைந்துள்ள விற்பனை நிலையம் உட்பட பண்ணைகளிலுள்ள விற்பனை சாலைகளிலும் சந்தைப்படுத்தப்பட்டது. பிறகு, கீல்ஸ் சுப்பர் மார்கட் ஊடாகவும் விற்பனை செய்யப்பட்டதுடன் இது ஒரு மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கையாகவே அமைந்தது. புதிய பசும் பாலுக்கு நாட்டில் நிலவும் அதிக கிராக்கியின் காரனமாக, இந்த வினியோக முறையை விஸ்தரிக்க வாய்ப்புகள் அதிகமாகவே கானப்படுகிறது.

இலங்கை தீவ் பூராகவும் வினியோக முறையை விஸ்தரிப்பதற்கு தேசீய கால்நடை வளங்கள் அபிவிருத்தி சபையிக்கும் மலிபன் வினியோகத்தர்களுக்கும் இடையில் கூட்டு முயற்ச்சி ஒன்று 2013 ஜுன் மாதத்தில் ஆரம்ரிக்கப்பட்டது. கீழ் கானும் புள்ளி விபரங்கள் மலிபன் விணியோகத்தார் ஊடாக மேற்கொள்பட்ட வினியோக முறை வெற்றியளித்துள்ள என்பதை தெளிவாக காட்டுகிற அதேவேலை இதை இன்னும் மேம்படுத்த முடியும் என்பதையும் காட்டுகிறது.

தேசீய கால்நடை வளங்கள் அபிவிருத்தி சபையின் விற்பனை நிலையங்கள்,அங்காடிகள், அனுமதிபெற்ற வினியோகத்த்கள் மற்றும் பண்ணை விற்பனை நிலையங்களுக்கு சபையின் பால் வினியோகம் பிரிவின் ஊடாக நடைப்பெறுகிறது. டிலையிட் பெயரில் சந்தைப்படுத்தல் விஸ்தரிக்க முன்பு, தேசீய கால்நடை வளங்கள் அபிவிருத்தி சபையின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட மாதாந்த சராசரி விற்பனை 8000 டிலைட் பகட்டுகள் மட்டுமாக இருந்தது.

டிலைட் பால் பகட்களின் விற்பனை:

வருடம்	தே. கா.வ.அ. சபையின் விற்பனை (சொந்த விற்பனை நிலையங்களுடாக)	விற்பனை (மலிபன் ஊடாக)	மொத்தம்
2011	79,489	-	79,489
2012	91,549	-	91,548
2013 (ஜன - ஜுன்)	47,344	-	47,344
2013 (ஜுலை - டிசம்பர்)	33,548	126,900	160,448
2013 மொத்தம			**207,792**

6.0 கடந்த நான்று வருடத்தினுள் பௌதீக ரீதியிலான செயலாற்றுகை

கால் நடை மற்றும் பயிர் உற்பத்தி அட்டவணை (2)

	Activity	நடவடிக்கை	2007	2008	2009	2010	2011	2012	2013
6.1	**கால்நடை எண்ணிக்கை**								
	பசுமாடுகள்	எண்ணிக்கை	8,272	8,199	8,621	8,329	8068	7755	7295
	எருமைகள்	எண்ணிக்கை	2,114	2,130	2,191	2,409	2534	2403	2080
	மொத்தம்	**எண்ணிக்கை**	**10,386**	**10,329**	**10,812**	**10,738**	**10,602**	**10158**	**9375**
	ஆடுகள்	எண்ணிக்கை	1,738	1,673	1,656	1,454	945	759	776
	செம்மறி ஆடுகள்	எண்ணிக்கை	2,222	2,692	2,956	3,043	3411	3148	4358
	பன்றிகள் (இனவிருத்தி)	எண்ணிக்கை	1,306	923	1,514	975	1439		764
	கோழிப்பண்ணை								
	புறொயிலர் தாய் குஞ்சுகள்	எண்ணிக்கை	26,743	29,904	25,953	33,838	32878	20610	19585
	லேயர் தாய் குஞ்சுகள்	எண்ணிக்கை	6,053	5,767	4,998	9,870	7260	2743	6165
	வர்த்தக லேயர்	எண்ணிக்கை	21,001	15,145	6,180	4,298	7541	10016	7535
	வர்த்தக புறோயிலர்	எண்ணிக்கை	14,979	3,336	1,433	1,958	5400	0	0
	காடைகள்		8,349	6,552	46	377	252	0	0
	முயல்கள்	எண்ணிக்கை	1,117	811	507	0	0	0	0
6.2	**இனவிருத்திக்கான கால்நடை வழங்கல்**								
	பசுமாடுகள்	எண்ணிக்கை	1,153	1,200	1,033	944	1328	1997	2682
	எருமைகள்	எண்ணிக்கை	265	174	128	210	185	124	285
	ஆடுகள்	எண்ணிக்கை	267	281	274	218	503	245	21
	செம்மறி ஆடுகள்	எண்ணிக்கை	194	367	312	123	181	563	652
	பன்றிகள்	எண்ணிக்கை	1,516	2,294	1,833	3,328	2885	2879	3272
	முயல்கள்	எண்ணிக்கை	1,403	1,071	746	0	0	0	0
6.3	**கோழிக்குஞ்சு உற்பத்தி**								
	புறொயிலர் குஞ்சுகள் (மில்லியன்)	எண்ணிக்கை	2.08	2.3	1.8	1.8	2.3	1.95	1.68
	லேயர் (மில்லியன்)	எண்ணிக்கை	0.81	0.9	0.6	1.0	1.1	0.66	0.46
6.4	**பால் உற்பத்தி**								
	பசும்பால்	லீற்றர் மில்லியன்	2.9	3.2	3.3	3.2	2.8	3.4	8.6
	எருமைப்பால்	லீற்றர் மில்லியன்	0.65	0.68	0.64	0.68	0.63	0.68	0.70
	ஆட்டுப்பால்	லீற்றர் மில்லியன்	22,637	23,077	27,640	13,358	10,753	4716	5296
6.5	**முட்டை உற்பத்தி (மில்லியன்)**	**எண்ணிக்கை**	**4.1**	**3.4**	**1.9**	**1.0**	**2.0**	**2.53**	**1.24**
	காடை முட்டை	எண்ணிக்கை	0.25	0.21	0.05	0.02	0.04	0	0
6.6	**புறொயிலர் உற்பத்தி (பறவைகள்)**	**மில்லியன்**	**0.09**	**0.09**	**0.01**	**0.01**	**0.03**	**0**	**0**
6.7	**தெங்கு ஒற்பத்தி (காய்கள்)**								
	தெங்கு ஒற்பத்தி	மெ.தொன்	21.73	20.55	21.48	20.60	19.94	21.39	14.17
	கொப்பரா உற்பத்தி	மெ.தொன	537.4	278.7	336.71	247.85	227.18	220.92	170.78

7. கால்நடை மற்றும் பயிர்ச்செய்கை சம்பந்தமான தகவல்கள்

	நடவடிக்கை	கூறு	2009	2010	2011	2012	2013
7.1	**கால்நடை எண்ணிக்கை**						
	பசுமாடுகள்	எண்ணிக்கை	8,621	8,329	8068	7755	7295
	எருமைகள்	எண்ணிக்கை	2,191	2,409	2534	2534	2080
	மொத்தம்		**10,812**	**10,738**	**10602**	**10158**	**9375**
	ஆடுகள்	எண்ணிக்கை	1,656	1,454	945	759	776
	செம்மறி ஆடுகள்	எண்ணிக்கை	2,956	3,043	3411	3148	4358
	பன்றிகள் - இனவிருத்திககான	எண்ணிக்கை	1,514	975	1439	1716	764
	முயல்கள்		507	0	0	0	0
	கோழிப்பண்ணை						
	புறொயிலர் தாய் குஞ்சுகள்	எண்ணிக்கை	25,953	33,838	32878	20610	19585
	லேயர் தாய் குஞ்சுகள்	எண்ணிக்கை	4,998	9,870	7260	2743	6165
7.2	**இனவிருத்திக்கான கால்நடை வழங்கல**						
	பசுமாடுகள்	எண்ணிக்கை	1,033	944	1328	1997	2682
	எருமைகள்	எண்ணிக்கை	128	210	185	124	285
	ஆடுகள்	எண்ணிக்கை	274	218	503	245	21
	செம்மறி ஆடுகள்	எண்ணிக்கை	312	123	181	563	652
	பன்றிகள்	எண்ணிக்கை	1,833	3,328	2885	2879	3272
	முயல்கள்	எண்ணிக்கை	746	0	0	0	0
	கோழிக்குஞ்சு உற்பத்தி						
	புறொயிலர் குஞ்சுகள் (மில்லியன்)	எண்ணிக்கை (மில்லியன	1.8	1.8	2.3	1.95	3.2
	லேயர் (மில்லியன்)	எண்ணிக்கை (மில்லியன்	0.6	1.0	1.1	0.66	0.6
7.3	**பால் உற்பத்தி**						
	பசும்பால்	லீற்றர் மில்லியன்	3.3	3.2	2.8	3.4	8.6
	எருமைப்பால்	லீற்றர் மில்லியன்	0.64	0.68	0.63	0.68	0.70
	புறொயிலர் உற்பத்தி	எண்ணிக்கை மில்லியன்	0.01	0.01	0.03	0	0
7.4	**தெங்கு ஒற்பத்தி (காய்கள்)**						
	தெங்கு ஒற்பத்தி	எண்ணிக்கை (மில்லியன	21.5	20.6	19.94	21.39	14.17
	கொப்பரா உற்பத்தி	மெற்றிக் டொன்	336.7	247.9	227.18	220.92	170.78

8.0 2013 ஆம் ஆண்டின் கால்நடை மற்றும் பயிர்ச்செய்கை சம்பந்தமான தகவல்கள்

நடவடிக்கை	கூறு	எண்ணிக்கை 2010	எண்ணிக்கை 2011	எண்ணிக்கை 2012	எண்ணிக்கை 2013
பசுமாடுகள்					
மொத்த எண்ணிக்கை	எண்ணிக்கை	8,329	8068	7755	7295
2வயதுக்கு மேற்பட்ட இளம்பசுக்கள்	எண்ணிக்கை	1,550	1318	965	1070
0-2 வயதுக்குட்பட்ட இளம் பசுக்கள்	எண்ணிக்கை	2,084	1987	1432	1910
ஒரு வயதுக்குக் குறைந்த காளை கன்றுகள்	எண்ணிக்கை	957	1102	746	439
மொத்த பிறப்புகள்	எண்ணிக்கை	2,613	2380	2646	3410
இனவிருத்திக்கான மொத்த வழங்கல்	எண்ணிக்கை	944	1328	1997	2682
மொத்த விலக்கல்கள்	எண்ணிக்கை	932	349	860	738
மொத்த இறப்புகள்	எண்ணிக்கை	631	980	1047	743
பசுக்களின் மொத்த எண்ணிக்கை	எண்ணிக்கை	3,430	3443	3406	3787
பால்தரும் பசுக்களின் மொத்த எண்ணிக்கை	எண்ணிக்கை	1,519	1404	1339	2124
பாலில் உள்ள பசுக்களின் மூ சதவீதம்	□	57	53	51	59
சராசரி உற்பத்தி ∴ பால்பசு நாளாந்தம்	லீற்றர்	5.8	5.6	7	11.2
பால்தரும் சராசரி காலம்	நாட்கள்	265	274	263	280
பால் உற்பத்தி	லீற்றர் (மில்லியன்)	3.2	2.8	3.4	8.6
செயற்கை சினையூட்டப்பட்ட விலங்குகளின் எண்ணிக்கை	எண்ணிக்கை	3,471	3064	2759	6260
எருமைகள்					
மொத்த எருமைகளின் எண்ணிக்கை	எண்ணிக்கை	2,409	2534	2403	2080
2 வயதுக்குக் கூடிய எருமைகள் இளம் பெண் எருமைகள்	எண்ணிக்கை	611	527	527	468
0-2 வயதுக்குட்பட்ட இளம் பெண் எருமைகள்	எண்ணிக்கை	481	489	465	464
காளைக் கன்றுகளின் எண்ணிக்கை	எண்ணிக்கை	202	422	443	190
மொத்த பிறப்புக்கள்	எண்ணிக்கை	642	576	627	601
இனவிருத்தி மொத்த வழங்கல்	எண்ணிக்கை	211	185	124	285
மொத்த விலக்கல்கள்	எண்ணிக்கை	219	9	119	125
மொத்த இறப்புக்கள்	எண்ணிக்கை	207	380	299	304
பசுக்களின் எண்ணிக்கை	எண்ணிக்கை	925	939	959	943
பால்தரும் பசுக்களின் எண்ணிக்கை	எண்ணிக்கை	442	394	427	432
பால் தரும் பசுக்களின் மூ சதவீதம்	மூ	45	49	43	48
சராசரி உற்பத்தி பசு நாளாந்தம்	லீற்றர்	6.0	4	4	3.9
பால் தரும் காலம்	நாட்கள்	254	281	314	251
பால் உற்பத்தி	லீற்றர் (மில்லியன்)	0.68	0.63	0.68	0.70
1வது பிரசவ சராசரி வயது	மாதங்கள்	52	58	48	50
பிரசவ சராசரி இடைக்காலம்	நாட்கள்	511	432	434	503
செயற்கை சினையூட்டப்பட்ட விலங்குகளின் எண்ணிக்கை	எண்ணிக்கை	45	51		0

நடவடிக்கை	கூறு	எண்ணிக்கை 2010	எண்ணிக்கை 2011	எண்ணிக்கை 2012	எண்ணிக்கை 2013
கோழிப்பண்ணைகள்					
புறொயிலர் தாய் குஞ்சுகள்					
மொத்த எண்ணிக்கை	எண்ணிக்கை	33,838	32878	20610	19585
பறவைகளின் இறக்குமதி					
சேவல்கள்	எண்ணிக்கை	7,609	1889	2380	2487
பேடுகள்	எண்ணிக்கை	19,116	12810	15223	16540
மொத்த முட்டை உற்பத்தி	எண்ணிக்கை	2,496,626	3574459	2530031	2537320
குஞ்சுபொரிக்கக்கூடிய எண்ணிக்கை	எண்ணிக்கை	2,332,740	4284521	2738691	2281182
குஞ்சுபொரிக்கும் தன்மையின் சதவீதம்	□	76	78	81	74
கோழிக்குஞ்சு மொத்த உற்பத்தி	எண்ணிக்கை	1,768,333	2,329,205	1,950,756	1,689,905
லேயர் தாய்ப்பறவைகள்					
மொத்த எண்ணிக்கை	எண்ணிக்கை	9,870	7260	2743	6165
பறவைகளின் இறக்குமதி					
சேவல்கள்	எண்ணிக்கை	1,380	1798	375	750
பேடுகள்	எண்ணிக்கை	11,492	14103	3120	6240
மொத்த முட்டை உற்பத்தி	எண்ணிக்கை	1,575,334	1915251	1052873	823829
குஞ்சுபொரிக்கக்கூடிய முட்டைகளின் எண்ணிக்கை	எண்ணிக்கை	1,417,274	1755556	924012	667149
குஞ்பொரிக்கும் தன்மையின் சதவீதம்	□	75	75	70	74
கோழிக்குஞ்சு மொத்த உற்பத்தி	எண்ணிக்கை	956,338	1141007	330850	460486
வர்த்தக புறொயிலர் உற்பத்தி					
மொத்த எண்ணிக்கை	எண்ணிக்கை	1,958	5400	0	0
புறொயிலர் உற்பத்தி	பறவைகள்	7,114	37161	0	0
வர்த்தக முட்டை உற்பத்தி					
மொத்த எண்ணிக்கை	எண்ணிக்கை	4,298	7541	10016	7535
பேடுகளின் மொத்த எண்ணிக்கை	எண்ணிக்கை	6,466	7944	6499	6230
முட்டை உற்பத்தி	மில்லியன்	1,042,385	2095328	2530031	1241936
பன்றிகளின் செயற்பாடு (இனவிருத்தி)					
மொத்த எண்ணிக்கை	எண்ணிக்கை	975	1439	1716	764
பிறந்த பன்றிக்குட்டிகள்	எண்ணிக்கை	3,228	3571	3466	2776
சராசரி பருமன் - பெண் பன்றி	எண்ணிக்கை	9	8	8.5	9
சுராசரி பருமன் ஆண் பன்றி	எண்ணிக்கை	8	8	9	10
இறந்த பன்றி குட்டிகளின் எண்ணிக்கை	எண்ணிக்கை	294	313	423	245
ஆடுகளின் செயற்பாடு					
மொத்த எண்ணிகை	எண்ணிக்கை	1,454	945	759	776
பிறந்த ஆடு குட்டிகள்	எண்ணிக்கை	642	374	292	408
ஆடு குட்டிபோடு விகிதம்	எண்ணிக்கை	0.78	0.61	0.64	0.64
இறப்புக்களின் எண்ணிக்கை(குட்டிகளும் வளர்ந்ததும்)	எண்ணிக்கை	191	355	190	235
இனவிருத்திக்கான வழங்கல்	எண்ணிக்கை	218	503	245	21

நடவடிக்கை	கூறு	எண்ணிக்கை 2010	எண்ணிக்கை 2011	எண்ணிக்கை 2012	எண்ணிக்கை 2013
செம்மறி ஆடுகளின் செயற்பாடுகள்					
மொத்த எண்ணிக்கை	எண்ணிக்கை	3,043	3411	615	4358
பிறந்த குட்டிகள்	எண்ணிக்கை	1,434	1294	1327	1887
குட்டிபோடும் விகிதம்	எண்ணிக்கை	0.75	0.76	0.86	1.2
இறப்பு எண்ணிக்கை (வயது வந்ததும் குட்டிகளும்)	எண்ணிக்கை	188	323	133	195
இனவிருத்திக்காக வழங்கிய எண்ணிக்கை	எண்ணிக்கை	123	181	563	652
விவசாயிகளுக்கான பயிற்சித்திட்டங்களின் செயலாற்றுகை					
பாட நெறிகளின் எண்ணிகை	எண்ணிக்கை	108	110	70	73
பங்பற்றியோரின் எண்ணிக்கை	எண்ணிக்கை	3,597	3945	2619	1806
தெங்கு உற்பத்தி					
உற்பத்தி செய்யப்பட்ட தேங்காய்கள்	எண்ணிக்கை	20,602,480	19941373	21386572	14179220
கொப்பரா உற்பத்தி	மெற்றிக் தொன்	247.85	227.18	220.92	170.78

மனித வள முகாமைத்துவப் பிரிவின் 2013 ம் ஆண்டிற்கான நடவடிக்கைகளும் பயிற்ச்சித் திட்டங்களும்

ஆளணியைச் சேர்த்தல்

உதவி பண்ணை முகாமையாளர்	01
மிருக வைத்தியர்கள்	03
உதவி முகாமையாளர் (மனிதவள)	01

ஒப்பந்த அடிப்படையிலும் தற்காலிக அல்லது நாளார்ந்த அடிப்படையிலும் வேலைக்கமர்த்தப்பட்ட 190 ஊளியர்களை நிரந்தரமாக்கல்

சபையில் ஒப்பந்த அடிப்படையிலும் தற்காலிக அல்லது நாளார்ந்த அடிப்படையிலும் நீண்ட காலம் சேவை செய்த 190 ஊளியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கும் நிகழ்வு கௌரவ அமைச்சர் தலைமையில் 2013 ம் ஆண்டு டிசம்பர் 19 ம் திகதி இடர் முகாமைத்துவ அமைச்சியில் நடைப் பெற்றது. இந்த நியமனங்களுக்கு மேலதிகமாக, 10 ஊழியர்களுக்கு பதவி உயர்வுகளும் வழங்கப்பட்டது.

விணைத்திறன் தடை பரீட்சை - 2013

2013 ம் ஆண்டு ஜூலை 06 ம் திகதி 38 ஊழியர்களுக்கு அவர்களுக்குறிய தரங்களை வழங்கப்பட்டது.

பயிற்சி

- பல்வித வேலைகளை கையாளுவதற்கான பயிற்சித் திட்டம் வரவேற்பு உத்தியோகத்தர்களுடைய மற்றும் தொலை பேசி இயக்குனர்களுடைய தேர்ச்சி மேம்படுத்தல்
- செயலாளர் வழக்கங்களுக்கான பயிற்சித் திட்டம்
- பன்றிகள் முகாமைத்துவம் மற்றும் வசதிகள்களுக்காக நடைமுறை சந்தர்பம் வழங்குதல்
- புதிய தேசீய தேர்ச்சி தரங்களை அறிமுகப்படுத்தலும் நடைமுறை படுத்தலும்.
- விற்பளை உதவியாளர்களுக்கான பயிற்சித் திட்டம்
- பேராதெனிய பல்கலைக் கழக மானவருக்கு பயிற்சி
- உள் நடுகை பற்றிய பயிற்சி - தொழில் நுட்ப (விவசாயம்) உயர்தர தேசீய டிப்லோமா 2013/2014 மானவர்களுக்கு பயிற்சி
    - நயிடா NAITA
    - தொழில்நுட்ப கல்லூரி-தம்புள்ள
    - ஹாடி உயர்தர தொழில்நுட்ப நிறுவனம்
- நம்பிக்கையும் உடன்பாடான சிந்தனைகளை ஊக்குவிப்பதற்கென தலைமை காரியாலத்தின் ஊழியர்களுக்கு திரு. சந்திக்க கொடிகார அவர்களால் நடாத்தப் பட்ட விரிவுரை.

பார்வையிடும் சுற்றுலா:

சபையின் சகல ஊழியர்களையும் 2013ம் ஆண்டு நொவெம்பர் 22 மற்றும் 23 ம் திகதிகளில் மனிக்பாலம மற்றும் போபத்தலாவ மற்றும் றொசிட்டா பண்ணைகளுக்கு கூட்டி சென்று பார்வையிடும் சந்தர்பம் வழங்கப்பட்டது.

டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம்

2013 ஆம் ஆண்டில் பல தடவைகள் தலைமை அலுவலகமும் அதன் அன்றிய சுற்றுப்புறமும் சகல ஊழியர்களும் பங்குபற்றி சுத்தம் செய்யப்பட்டது. (2013.07.09, 2013.07.16, 2013.08.26, 2013.10.01)

மத போதனை

வெசாக் பன்டிகையை முன்னிட்டு, 2013 ஆம் ஆண்டு மே மாதம் 22 ம் திகதி காலை 9.00 மணி முதல் ஒரு மனி தியாலம் பௌத்த தர்ம மத போதனை ஒன்று நடாத்தப்பட்டது.

அன்னதானம்

வெசாக் போயா தினத்தை முன்னிட்டு, சபையின் தலைவர் தலமையில் தலமை அலுவலக சுற்றாடலில் பசும் பாலும் சீனி சம்பல் அடங்கிய பானும் வழங்கப்பட்டது.

போதி பூஜை

சபையின் எல்லா ஊழியர்களுடைய பங்களிப்புடன், எல்லாருக்கும் நல்லாசி வேண்டி போதி பூஜை ஒன்று நடாத்தப்பட்டது.

வெசாக் கூடு போட்டி

வெசாக் பன்டிகையை முன்னிட்டு, சபையின் ஊழியர்கள் இடையில் வெசாக் கூடு போட்டி ஒன்றும் நடாத்தப்பட்டது.

நத்தார் பன்டிகையை கொண்டாடுதல்:

ஒவ்வொரு வருடமும் நடாத்தப்படும் நத்தார் பன்டிகையை கொண்டாடுதல், இவ்வருடமும் சபையின் எல்லா ஊளியர்களுடைய பங்களிப்புடன் மிகவும் அலங்காரமாக நடாத்தப்பட்டதுடன் நாவலயிலுள்ள குனசேகர சிறுவர் பராமரிப்பு நிலையத்திலுள்ள பிள்ளைகளுக்கு கல்வி உபகரனங்களும் மற்றும் பரிசுகளும் வழங்ப்பட்டது.



WELLARD
SRF093

நிதி அறிக்கைகள்

தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை

முன்னுரை

இலங்கை பட்டயக் கணக்காளர் சபை இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் (SLFRS/LKAS) வழங்கியது தொடர்ந்து இலங்கையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களை (SLFRS/LKAS) 2012 ஜனவரி 01 திகதி முதல் உபயோகிக்க தொடங்கியது. தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை இவ் நியமங்களை பின்பற்ற வெண்டிய நிச்சியமாக்கப்பட்ட ஓர் நிறுவனம் என்ற வகையில், தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை இவ் நியமங்களை 2013 ஆம் ஆணடு டிசம்பர் 31ம் திகதி முடிவடையும் ஆண்டிலிருந்து பின்பற்றியுள்ளது.

அறிமுகம்

தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை 1972 ஆம் ஆண்டின் 11ம் இலக்க அரச விவசாய கூட்டுஸ்தாபன சட்டதின் கிழ் 1973 ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. ஆதன் வர்தக நடவடிக்கைகள் 1974 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சின் கீழ் இது இயங்கி வருகின்றது. தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையின் தொலைநோக்கு “எமது மக்களின் சமூக, பொருளாதார நிலைமைகளை மேம்படச் செய்ய வென தரமான இன பெருக்க சாதனங்கள், கால்நடை மற்றும் விவசாயப் பொருட்களை உற்பத்தி செய்யும் இலங்கையில் சிறந்த சுய பூர்த்தியுள்ள அமைப்பாக அமைவது” என்று அடையாளங்கானப்பட்டுள்ளது. தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபைக்கு நாட்டின் சகல பகுதிகளிலும் பண்ணைகளும் சொத்துகளும் உள்ளன.

அதன் முக்கிய நடவடிககைகள் பின்வருமாறு:

1. கால் நடைகளை வளர்த்து இனவிருத்தி செய்தல்.
2. நியாய விலையில் விவசாயிகளுக்கு தரமான இனவிருத்திப் பொருட்களை வழங்குதல்
3. உச்சக்கட்ட இலாபத்தைப் பெறவென தென்னந்தோட்டங்களை சிறந்த முறையில் பராமரித்தல்.
4. பொருத்தமான பண்ணைகளில் கால் நடை பயிர்ச்செய்கை ஒன்றிணைந்த பண்ணை வழிமுறைகளை மேற்கொள்ளுதல்.
5. முக்கியமாக சிறிய அளவிலான கால்நடைப் பண்ணையாளருக்கும். பொதுவாக விவசாயிகள், மாணவர்கள், விவசாயத்துறையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் ஆகியோருக்குப் பயிற்சியும் செய்முறை விளக்கமும் வழங்குதல்.
6. பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் தரமான உற்பத்திகளை நியாயமான விலையில் வழங்குவதற்கு விற்பனை நிலையங்களை நிறுவி பராமரித்தல்
7. உச்சக்கட்ட இலாபத்தைப் பெறவென பண்ணை மூலப்பொருட்களை உபயோகித்து பெறுமதிமிக்க பொருட்களை உற்பத்தி செய்தல்.
8. மக்கள் மத்தியில் பால் பருகும் பழக்கத்தைப் பிரபல்யப்படுத்தும் வகையில் சுத்தமான பசும்பாலை விற்பனை செய்தல்.

1.1 நிதி அறிக்கைகள் சமர்பிப்பதற்கான பொறுப்பு

1971 ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி சட்டத்தின் 13 (1) பிரிவின் மற்றும் 1972 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க அரச விவசாய கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் 25 பிரிவின் கீழ் தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் சபை வருடாந்தம் நிதி அறிக்கைகளை சமர்பிப்பதற்கு கடமை பட்டுள்ளது. 1995 ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் 6 (1) பிரிவின் கீழ் சபை இலங்கை நிதிசார் அறிக்கைகள் சமர்பிற்க்கும் நியமங்கள் (ளுடுகுசுளு) பிரகாரம் நிதி அறிக்கைகளை தயாரித்து சமர்பிப்பதற்கு கடமைப் பட்டுள்ளது. இலங்கை பட்டயக் கணக்காளர் சபையினால் இந்த நியமங்கள் (ளுடுகுசுளு) இதே சட்டத்தின் 05 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படுகிறது. இந்த சட்டத்தின் அட்டவனைகளின் படி “பொருட்களை அல்லது சேவைகளை வழங்கும் அரச கூட்டுத்தாபனம்” ஓர் விவரிக்கப்பட்ட வியாபார நிறுவனமாக உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆகையால், 2012 ஆண்டு ஜனவரி 01ஆம் திகதி முதல் இலங்கை கணக்கீட்டு நியமங்களை (SLFRS/ LKAS) படி நிதி அறிக்கைகள் சமர்பிப்பதற்கான பொறுப்பு தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையிக்கு கட்டாயமாக்கப் பட்டுள்ளது.

சர்வதெச நிதி அறிக்கைகள் சமர்பிற்கும் நியமங்களுக்கு (IFRS) மாற்றத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:

- உச்சக்கட்ட செயற்பாட்டையும் திரவ நிதி சந்தையையும் உருவாக்கல்.
- விரிவானதும், வெளிபடையானதுமான நிதி நடவடிக்கை மூலம் நிறுவனங்களை மதிப்பீடு செய்ய உதவுதல்.

நிதி அறிக்கைகளின் வெளிபடைப் தன்மையையும் ஒப்பிடும் தன்மையையும் உறுதிப்படுத்த வேண்டிய அவசியத்தை உனர்ந்து சர்வதெச நிதி அறிக்கைகள் சமர்பிற்கும் நியமங்களை (IFRS) உலகளாவிய ரீதியில் பின்பற்றப்பட்டது. இதனுடாக திறமைமிக்க மூலதன சந்தையை உருவாகுவதை நிச்சிய படுத்தி கூடுதலான விரிவான தகவலகளை பாவனையாளருக்கு வழங்கி உருவத்தை விட அடங்கியுள்ள பொருளடக்கத்திற்கு முக்கியத்தை வழங்க உத்தேசிக்கப்பட்டது. சர்வதெச நிதி அறிக்கைகள் சமர்பிற்கும் நியமங்கள் (ஐகுசுளு) உலகளாவிய ரீதியில் அதன் முக்கியத்தை அதிகரித்து கொண்டு செல்கிறது. 2005 ஆன்டில் ஐரோப்பிய சமூகம் இந்த நியமங்களை கடைப்பிடிக்க வேண்டு மென சில நிறுவனங்களை கேட்டுக்கொண்டதை அடுத்து பல நாடுகள்

இந்த நியமங்களை கடைப்பிடிக்க ஆரம்பித்தன. உதாரனமாக, அவுஸ்ரேலியா, நியுசாலாந்து, இஸ்ரேல் ஆகிய நாடுகள் இதை ஏற்கனவே கடைப்பிடிக்க ஆரம்பித்துள்ளன. 2011 ஆம் ஆண்டு தொடக்கம் கணடாவும் ஜப்பானும் இவைகளை பின்பற்ற உத்தேசிதுள்ளது. ஏனைய நாடுகளும் சர்வதெச நிதி அறிக்கைகள் சமர்பிற்கும் நியமங்களை (IFRS) பின்பற்ற விரிவான திட்டங்களை வகுத்து வருகின்றன.

1.2 இந்த அறிக்கையின் நோக்கங்கள்:

தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையினால் நிதி அறிக்கைகளை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRS/LKAS) மாற்றமடைய செய்வதற்கு மேற்கொள்பட்ட நடவடிக்கைகளை பற்றி இந்த அறிக்கை விபரிக்கிறது. முதலில் இலங்கை கணக்கீட்டு நியமங்களை (SLFRS/LKAS) அட்டவணைப்படுத்தப் படுகின்றது. இதனையடுத்து, ஒவ்வொரு ளுடுகுசுளு அல்லது LKAS நியமங்களின் பொருந்தும் தன்மையை விபரிக்கிறது. தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையிக்கு பொருந்தாத நியமங்களை தனியாக அட்டவணைப்படுத்தப் படுகின்றது. அடுத்ததாக, இவற்றினால் ஏற்படுத்தப்படும் கணக்கியல் கொள்கையில் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் மற்றும் இவையினால் நிதி அறிக்கைகளுக்கு ஏற்படுத்தப்படும் தாக்கங்கள் பற்றியும் ஆராய்கிறது.

இந்த அறிக்கைகளில் விரிவாக தெரிவிக்கப்பட்ட வழிமுறைகளுக்கமைய, 2013 டிசம்பர் 31 ம் திகதியிலான தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையின் நிதி அறிக்கை சபையின் முகாமைவத்துவத்தினரால் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRS/LKAS) அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

1.3 எதிர்காலத்தில் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (SLFRS/LKAS) பயன்பாடு:

தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை எதிர்காலத்தில் நிதி அறிக்கைகளை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRS/LKAS) அடிப்படையில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கும் நடவடிக்கை தொடரும். எனவே, முன்னைய SLFRS அல்லது GAAP இன் கீழான நடவடிக்கைகளின் தாக்கங்கள் பற்றி மதிப்பீடு செய்ய வேண்டிய அவசியம் எதுவும் கிடையாது.

சீர் மதிப்பு பெறுமதி தெகையை உபயோகித்து கணக்கறிக்கைகளை தயாரிப்பது உலக நாடுகளின் தற்போதைய போக்காக இருந்தாலும், பல பொருட்களின் சீர் மதிப்பு பெறுமதி தெகையை எவ்வாரு மதிப்பிடுவது பற்றி எத்தகைய இணக்கப்பாடும் கிடையாது.

உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய பயன்களின் இன்றைய ஆயுட்கால பெறுமதி மற்றும் சம்பந்தப்பட்ட கொடுப்பனவுகளுக்காக,தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை தொடந்தும் சூத்திரம் முறையை கடைப்பிடிக்கும்.

2. SLFRS மாற்றத்தின் முக்கிய அம்சங்கள்

2.1 உயரியல் சொத்துக்கள்

உயரியல் சொத்துக்கள் என்றால் என்ன?

